ஆக்கம்: ஆசிரியை N. பத்மலோஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

# இலங்கை சுதந்திரம் அடைதல்

## அரசியல் கட்சி முறைமை

அரசியல் கட்சி முறைமை என்பது பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்ற கட்டாயமான ஒரு பண்பாகும். இது தொடர்பாக இப்பாடப்பகுதியை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. இலங்கையில் முதன்முறையாகக் கட்சி முறைமை பிரயோகிக்கப்பட்ட ஆண்டு.
   I. 1931 II. 1910 III. 1947 IV. 1833

2. இலங்கையில் முதலாவது தோன்றிய அரசியல் கட்சி.
   I. சமசமாஜக் கட்சி II. கம்யூனிஸ்ட் கட்சி III. ஐக்கிய தேசியக் கட்சி IV. இடது சாரிக் கட்சி

3. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கியவர்.
   I. பிலிப் குணவர்தன II. S.W.R.D. பண்டாரநாயக்கா
   III.D.S. சேனாநாயக்கா IV. S.J.V. செல்வநாயகம்

4. இலங்கையின் அரசியல் தலைவர்களும் அவர்கள் தலைமை வகித்த அரசியல் கட்சிகளும் இடம் பெறும் நான்கு சோடிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பிழையான விடை யாது?
   I. A.E. குணசிங்க - தொழிற் கட்சி II. N.M. பெரேரா - இலங்கை சமசமாஜக் கட்சி
   III. S.J.V. செல்வநாயகம் - தமிழரசுக் கட்சி IV. பிலிப் குணவரதன - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

5. 1953 ஆகஸ்ட் மாதம் இடது சாரிக் கட்சியின் ஹர்த்தால் செயற்பாட்டால் டட்லி சேநாயக்கா பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததால் அவ்விடத்திட்குப் பிரதமராக நியமிக்கப்பட்டவர்.
   I. S.W.R.D. பண்டாரநாயக்கா II. W. தசநாயக்கா
   III. சேர் ஜோன் கொத்தலாவல IV. சிறிமாவோ பண்டாரநாயக்கா

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. I. இரு கட்சி முறை என்றால் என்ன?
   II. இரு கட்சி முறை பின்பற்றப்படுகின்ற நாடுகள் எவை?

2. I. இந்நாட்டில் முதன்முறையாக கட்சி முறைமை பிரயோகிக்கப்பட்ட ஆண்டு எது?
   II. இவ்வாண்டில் நடாத்திய தேர்தலில் போட்டியிட்ட இரண்டு கட்சிகளின் பெயர்களை குறிப்பிடுக.

3. திரு. டட்லி சேனாநாயக்க அவர்கள் பிரதமர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததற்கான காரணம் யாது?

4. 1956 ஆம் ஆண்டு திரு. S.W.R.D. பண்டாரநாயக்கா அவர்களினால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் அல்லது கொள்கைகளை எழுதுக.

5. S.W.R.D. பண்டாரநாயக்கா செயற்படுத்திய தேசிய இயக்கத்தால் (அரசாங்கத்தால்) ஏற்பட்ட ஏனைய சமூக மாற்றங்கள் எவை?

6.



I. படத்தில் உள்ளவர் யார்?

II. இவர் உருவாக்கிய கட்சி எது?

III. எத்தனையாம் ஆண்டு அக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது?

IV. இவரது இக்கட்சியை ஆரம்பிப்பதற்கு துணையாக இருந்த இன்னொருவரைக் குறிப்பிடுக.